**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

பி. **வா.சா.– 3– சின்னகாளியப்பன் , த/பெ.சு பொம்முலு கவுண்டர்**

**நாள். 12.02.2026**

**மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் பி.வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

கருப்பாயி என்ற கலையரசி, பானுபிரியா தரப்பில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. 2ம் பிரதிவாதி கருப்பாயி என்ற கலையரசி சொல்லிதான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா வழக்கு எது குறித் நடந்து வருகிறது என்றால் சொத்து குறித்து நடந்து வருகிறது. வேடசந்தூர் அருகே அய்யர் மடத்திற்கு அருகில் பொம்முலு கவுண்டன்பட்டியில் குடியிருக்கிறேன். கருப்பாயி என்ற கலையரசியிடம் நான் அவ்வப்போது கொடுக்கல், வாங்கல் வைத்துள்ளேன் என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் கலையரசி சொல்லிதான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான்தான் சொன்னேன்.. ஆறுமுக கவுண்டர் யார், யாருடன் சேர்ந்து பாகம் பிரித்துக் கொண்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். சொத்தின் விஸ்தீரணம், சர்வே எண். எனக்கு தெரியாது என்றால் சர்வே எண் தெரியும், விஸ்தீரணம் தெரியாது. அந்த சர்வே எண்.467 ஆகும். சர்வே எண்ணுக்கு சம்மந்தப்பட்ட சொத்து கலையரசி சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல. அவரது அப்பா சொல்லியிருக்கிறார். தாவா சொத்திற்கு வடக்கே எனது சொத்து இருப்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொந்தமாக உழவடை டிராக்டர் வைத்து தொழில் செய்வதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யாததால் டிராக்டர் இல்லை என்றால் சரியல்ல. டிராக்டர் வைத்துள்ளேன். 2ம் பிரதிவாதி கருப்பாயி என்ற கலையரசி 20 வருடமாக ஆம்எம் காலனியில் வசித்து வருகிறார் என்றால் படிப்பதற்காக திண்டுக்கல் வந்தார். தற்போது ஊரில்தான் உள்ளார். ஆறுமுக கவுண்டர், ராஜன்னா என்ற சண்முகம் என்ற தோப்பு வீட்டில்தான் இருந்தாரா என்றால் கொஞ்ச நாட்கள் இருந்தார், அதன் பின்பு கலையரசி வீட்டிற்கு வந்து விட்டார். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு உயிலை பார்த்தது இல்லை, சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் பார்த்துள்ளேன், சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். எவ்வளவு ரூபாய் பத்திரம் என்றும், யார் எழுதியது என்றும் எனக்கு தெரியாது. ஆகவே சாட்சி கையொப்பம் நான் இட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

உயிலில் 3,4 இலக்க சொத்துக்கள் பற்றி எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். உயிலில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றாலும் அது எங்கு வைத்து எழுதப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. உயிலில் உள்ள சொத்துக்கள் யார், யார் பெயரில் பட்டா இருந்தது என்றும் யார் அனுபவித்து வருகிறார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. உழவடைக்கு மட்டும் செல்வேன். 2ம்பிரதிவாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்களும் உள்ளது என்றால் இல்லை. 2,3 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை- இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:12:40 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.